# What do I need to know if my child gets a formal caution?

Parent/carer information

# எனது குழந்தை சம்பிரதாய எச்சரிக்கையைப் பெற்றால் நான் என்ன தெரிந்து கொள்ள வேண்டும்?

## பெற்றோர்/பராமரிப்பாளர் தகவல்

### கரிசனக்-கவலையை ஏற்படுத்தும் நடத்தைக்கான சம்பிரதாய எச்சரிக்கை என்பது என்ன?

கரிசனக்-கவலையை ஏற்படுத்தும் நடத்தை என்பது ஒருவர் தமக்கு, அல்லது மற்றவர்களுக்குத் தீங்கை அல்லது ஆபத்தை ஏற்படுத்தவல்ல அல்லது ஆபத்தை ஏற்படுத்திய ஏதாவதொன்றைச் செய்வதைக் குறிக்கும். ஒரு 'சம்பிரதாய எச்சரிக்கை' என்பது ஒரு மாணவ-மாணவிக்கு, அவரின் நடத்தை அவருக்கும் மற்றவர்களுக்கும் தீங்கை அல்லது ஆபத்தை ஏற்படுத்தியது அல்லது ஏற்படுத்தலாம் அல்லது கற்பித்தல் மற்றும் கற்றலுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத ஆபத்தை ஏற்படுத்துகிறது என்று சொல்வதைக் குறிக்கும். அவர்களின் நடத்தை மேம்படுத்தப்பட வேண்டும் என்பதை உங்களுக்கும் உங்கள் பிள்ளைக்கும் தெரிவிக்கும் வகையில் இது வடிவமைக்கப்பட்டுள்ளது.

உங்களுடைய பிள்ளையின் கரிசனக்-கவலையை ஏற்படுத்தும் நடத்தையைப் பதிவு செய்யும் ஒரு கடிதமே சம்பிரதாய ஒரு எச்சரிக்கை என்பதாகும். இந்த நேரத்தில் உங்களுடைய பிள்ளை இடை நீக்கம் செய்யப்படமாட்டார்.

### சம்பிரதாய எச்சரிக்கை ஒன்றை என் பிள்ளை பெறும் பொழுது என்ன நடக்கும்?

பாடசாலை உங்களின் பிள்ளையுடன் கரிசனக்-கவலையை ஏற்படுத்தும் நடத்தை மற்றும் சம்பிரதாய எச்சரிக்கை குறித்த விளக்கம் குறித்து கலந்துரையாடும். சம்பிரதாய எச்சரிக்கையின் எழுத்து வடிவப் பிரதி ஒன்றை உங்களுக்கு பாடசாலை அதிபர் கொடுக்கவும் செய்வார்.

தனது நடத்தை ஏற்படுத்தியிருக்கும் தாக்கத்தினை உங்களுடைய பிள்ளை விளங்கிக்கொள்ளவும், நேர்மறையான நடத்தை ஆதரவுதவி உத்திகளில் ஈடுபடுவதற்கான ஆதரவுதவித் திட்டம் ஒன்றிற்கு அவர் சம்மதம் தெரிவிக்கவும் உங்களுடைய பிள்ளைக்கு நேரம் கொடுப்பதே இந்த சம்பிரதாய எச்சரிக்கையின் நோக்கம். உங்களுடைய பிள்ளளையின் நடத்தையைப் பற்றிக் கலந்து-பேசவும், உங்களுடைய பிள்ளைக்குத் தேவைப்படும் ஆதரவுதவிகளைத் திட்டமிடவும் அல்லது மீள்பார்வை செய்யவும் சந்திப்பு ஒன்றை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஒன்றைப் பாடசாலை உங்களுக்கும் உங்களுடைய பிள்ளைக்கும் கொடுக்கும்.

ஆதரவுதவி நபர் ஒருவரை பாடசாலையுடனான எந்த சந்திப்பிற்கும் நீங்கள் உடன் அழைத்துவரலாம்.

இந்த சம்பிரதாய எச்சரிக்கையானது 50 பாடசாலை நாட்களுக்கு நடைமுறையில் இருக்கும். இந்த காலப்-பகுதியில், உங்களுடைய பிள்ளை மீண்டும் அதே விதமாக நடந்துகொண்டால் அல்லது கரிசனக்-கவலையை ஏற்படுத்தும் வேறு நடத்தை/கள் காரணமாக அவர் இடைநிறுத்தம் செய்யப்படக்கூடும்.

### சம்பிரதாய எச்சரிக்கை ஒன்றை என் பிள்ளை பெற்றால் நான் என்ன செய்யவேண்டும்?

பாடசாலை விதிமுறைகளை அல்லது 'மாணவ-மாணவியருக்கான நடத்தை விதிகளை' பின்பற்றாத செயல்களை ஏறத்தாழ ஒவ்வொரு பிள்ளையும் செய்யும். சில தருணங்களில் இப்படி நிகழும் பொழுது சம்பிரதாய எச்சரிக்கை ஒன்று கொடுக்கப்படும். 'பாடசாலையில் உங்களுடைய பிள்ளை பிரச்சினைக்கு ஆளானால் என்ன செய்வது' என்பதைப் பற்றிய மேலதிகத் தகவல்கள் கிடைக்கும்.

சம்பிரதாய எச்சரிக்கை ஒன்றை உங்களுடைய பிள்ளை பெறுவாரேயானால், கவனிக்கப்படவேண்டிய நடத்தை ஒன்று இருக்கிறது என்பதை அது குறிக்கும். உங்களுடைய பிள்ளையின் நடத்தையைக் கட்டுப்படுத்துவதிலும், இணைவாய்ச் செயல்பட்டுத் தீர்வுகளை உருவாக்குவதிலும் பாடசாலையுடனான உங்களுடைய ஈடுபாடு முக்கியமானதாகும். இந்த சம்பிரதாய எச்சரிக்கையைப் பற்றிப் பாடசாலை அதிபருடன் பேசுங்கள், அத்துடன் சில தீர்வுகளைக் காண்பதற்காக உங்களுடைய பிள்ளைக்கு ஆதரவுதவியாக இருந்துவரும் அணியினருடன் இணைவாய்ச் செயலாற்றுங்கள்.

### இம் மாதிரியான நடத்தை மீண்டும் நிகழ்ந்தால் என்ன செய்வது?

ஆரம்ப-கட்ட சம்பிரதாய எச்சரிக்கை கொடுக்கப்பட்ட 50 பாடசாலை நாட்களுக்குள் கரிசனக்-கவலையை ஏற்படுத்தும் இந்த நடத்தை மீண்டும் நிகழ்ந்தால், உங்களுடைய பிள்ளையை இடைநிறுத்தம் செய்வதற்கான முடிவைப் பாடசாலை அதிபர் மேற்கொள்ளக்கூடும். உங்களுடைய பிள்ளையுடைய, மற்றும் மற்ற பிள்ளைகளுடைய தனிப்பட்ட நடத்தை மற்றும் தேவைகளைப் பாடசாலை அதிபர் அவதானித்த பிறகே உங்களுடைய பிள்ளையை இடைநிறுத்தம் செய்வதற்கான முடிவு நிகழும். மாணவ-மாணவி ஒருவரை இடைநிறுத்தம் செய்வது குறித்த தகவல்கள் கிடைக்கும்.

### எனக்கு இன்னும் கரிசனக்-கவலைகள் இருந்தால் என்ன செய்வது?

உங்களுடைய பிள்ளையின் படிப்பு, நடத்தை அல்லது பாடசாலையில் அவரது பொதுநலம் ஆகியவற்றைப் பற்றிய கரிசனக்-கவலைகள் உங்களுக்கு இருந்தால், உங்கள் பிள்ளையின் ஆசிரியர், உதவி-அதிபர் அல்லது பதில்-அதிபருடன் உரையாடல் ஒன்றைத் துவங்குவதே சிறந்த ஆரம்பம். உங்களுடைய பிள்ளையையும், சூழ் நிலையையும் பற்றித் தெரிந்தவர்களுடன் பேசுவதன் மூலம் பெரும்பான்மையான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணலாம்.

சில வேளைகளில் நீங்கள் வேறொரு நபருடன் பேச வேண்டிய தேவை இருக்கலாம். உங்களுக்கு உதவ இயலக்கூடிய உங்களுடைய உள்ளூர்ப்-பகுதியிலுள்ள 'கல்வி அலுவலக' (education office) த்தின் தொடர்பு விபரங்களை உங்களுடைய பாடசாலையால் உங்களுக்குக் கொடுக்க இயலும். உங்களுடைய கவலைகளுக்கான மருத்துவக் காரணங்கள் இருக்கக்கூடும் என்று நீங்கள் நினைத்தால், உங்களுடைய பிள்ளையின் மருத்துவருடன் பேசுவதைப் பற்றியும் யோசியுங்கள்.

'உங்களுடைய பிள்ளைக்கான பரிந்துரைப்பு'- பற்றிய தகவல்கள் மட்டுமின்றி, பாடசாலைகளுடன் தொடர்பாடல் கொள்வதற்கான வழிகளைக் விளக்கும் 'பாடசாலை சமூக சாசனம்' பற்றிய மேலதிக தகவல்களுக்கு

### பாடசாலையிடமிருந்து என்ன தகவல்களைப் பெற முடியும்?

என்ன நடந்தது, ஏன் நடந்தது என்பது பற்றிய கூடுதல் தகவல்களை நீங்கள் பாடசாலையிடம் கேட்கலாம். எந்தவொரு முடிவுகளின் பின்னணியில் உள்ள காரணத்தையும், என்ன நடவடிக்கைகள் நடக்கும் மற்றும் உங்களுக்கு ஏதேனும் சிக்கல் இருந்தால் என்ன செய்ய வேண்டும் என்பதை பாடசாலை உங்களுக்கு விளக்க வேண்டும்.

### தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவை

நீங்கள் பாடசாலையுடன் தொடர்புகொள்ள விரும்பி, ஆங்கில மொழியில் உங்களுக்கு உதவி தேவைப்பட்டால், தொலைபேசி உரைபெயர்ப்பாளர் சேவையை 131 450-இல் அழைத்து உங்களுக்கு என்ன மொழி தேவை என்பதைச் சொல்லி, பாடசாலையை அழைக்குமறு தொலைபேசி இயக்குநரைக் கேளுங்கள். உங்களுடைய உரையாடலில் உங்களுக்கு உதவுவதற்காக உரைபெயர்ப்பாளர் ஒருவரைத் தொலைபேசி இயக்குநர் இணைப்பிற்குக் கொண்டுவருவார். இந்த சேவைக்காக உங்களிடமிருந்து கட்டணம் அறவிடப்படாது.